

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மகளிர் திட்டம் மூலம், நாகர்கோவில் எஸ்.எல்.பி. அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற வேலை வாய்ப்பு முகாமில், தேர்வு செய்யப்பட்டவர்களில் முதற்கட்டமாக 13 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநரும், மகளிர் திட்டத்தின் திட்ட அலுவலருமாகிய திருமதி. டி.ஹெட்ஸி லீமா அமலினி அவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (12.11.2016) வழங்கினார்.

செ.வெ.எண்: 797/2016 நாள்: 12.11.2016

**தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்**
**மகளிர் திட்டத்தின் மூலம்**
**இளைஞர்களுக்கான மாபெரும் வேலை வாய்ப்பு முகாம்**
**இன்று (12.11.2016) நடைபெற்றது.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது உத்தரவின் பேரில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின்கீழ், ஊரக பகுதிகளில் படித்த வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை பெற்றுத்தந்து, நிலையான வாழ்வாதாரத்தை உருவாக்கி கொடுக்கும் பொருட்டு, வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் முதற்கட்டமாக நாகர்கோவில் எஸ்.எல்.பி. அரசு மேல்நிலைப்பள்ளியில் வைத்து தோவாளை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஊராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் நாகர்கோவில் நகராட்சி பகுதிகளை சேர்ந்த வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கான மாபெரும் வேலை வாய்ப்பு முகாமினை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநரும் மகளிர் திட்டத்தின் திட்ட அலுவலருமாகிய திருமதி. டி.ஹெட்ஸி லீமா அமலினி அவர்கள், இன்று (12.11.2016) குத்துவிளக்கேற்றி வைத்து, துவக்கி வைத்தார்கள்.

இம்முகாமில் தோவாளை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஊராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் நாகர்கோவில் பகுதிகளை சேர்ந்த வேலை வாய்ப்பற்ற 691 இளைஞர்கள் கலந்து கொண்டனர். உள்ளூர் மற்றும் மதுரை, கோவை, சென்னை உள்ளிட்ட பெரு நகரங்களிலிருந்து 28 நிறுவனங்கள் கலந்து கொண்டு, வேலைக்கு 141 இளைஞர்களை தேர்வு செய்து, முதற்கட்டமாக 13 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநரும் மகளிர் திட்டத்தின் திட்ட அலுவலருமாகிய திருமதி. டி.ஹெட்ஸி லீமா அமலினி அவர்கள் வழங்கினார்.

முகாமில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க உதவி திட்ட அலுவலர்கள் திரு. எம்.ஆறுமுகம், திரு. பி. அந்தோணிசிலுவை, திருமதி. எம்.கலைச்செல்வி, திரு. எம்.கே.பிச்சையப்பா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அலுவலக பணியாளர்கள், வட்டார ஒருங்கிணைப்பாளர்கள், சமுதாய ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் தொகுதி வழிநடத்துநர்கள் செய்திருந்தனர்.